பெறக்கூடிய பணத்தை பூராவும் எடுத்து செலவழிக்கக்கூடிய சூழ்நிலை அங்கே இருக்கிறது. அதேபோல் ஒரு ஆசிரியர் இறந்தால், அவருக்குச் சேரவேண்டிய பிராவிடண்ட்பண்டு கொடுக்க முடியாத சூழ்நிலை அங்கே இருக்கிறது. இதற்கு அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

வேளச்சேரி பகுதியில் குப்பைகளால் சுகாதாரக்கேடு

26 (*வினா எண்.2730—திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி வேளச்சேரி பகுதியில் குப்பைகளை கொட்டுவதால் சுகாதாரக் கேடு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வேளச்சேரி பகுதியில்துர்நாற்றம், மற்றும் ஈ, கொசு போன்ற பூச்சிகள் வராதவண்ணம், சுத்தமான மண் தூவி பூச்சி மருந்து தெளிக்கப்பட்டுள்ளது, மேலும் இப்பகுதியில் குப்பை கொட்டுவதை மாநகராட்சி தற்போது நிறுத்தி விட்டது.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரி பகுதியில் குப்பை கொட்டுவதை நிறுத்தியிருக்கிறார்கள். நன்றி. அதே நேரத்தில், 149 வது வட்டம் ஐ.ஐ.டி.க்கு எதிரில் என்னுடைய தொகுதியில் மறுபடியும் குப்பை கொட்டிக் கொண்டு வருகிறார்கள் என்று அந்த இடத்திலுள்ள மக்கள் எல்லாம் என்னிடத்திலும், நகரசபையிடத்திலும் பல புகார்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்திலிருந்து அதை அப்புறப்படுத்துவதோடு, அந்த இடத்திலே வீசுகின்ற துர்நாற்றத்தை உடனடியாகத் தடுப்பதற்கு ஏதேனும் மருந்துகளைத் தெளிக்க தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ: கிருஷ்ணசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து வருகின்ற குப்பைகளை எல்லாம் பயன்படுத்தி ஒரு உரத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருப்பதாக சென்ற ஆண்டு இதே அவையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த உரத் தொழிற்

சாலையை உடனடியாக ஏற்படுத்தினால், இதுபோன்ற நிலைமைகளை சரி செய்வதற்கு ஏதுவாக இருக்கும். இப்படிப் பட்ட உரத்தொழிற்சாலையை உடனடியாகத் துவக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்த தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—30)

திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் கொட்டப்படுகிற குப்பைகள் மொத்த மாகச் சேருகின்றபோது அவற்றை எரிப்பது என்று ஆலோசனை செய்யப்பட்டதே அது நடைமுறைக்கு வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடலாடித் தொகுதியில் சாயல்குடியில் பேருந்து நிலையம்

27—(*வினா எண் 4303) திரு. அ. பிரணவநாதன்: மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் கடலாடித் தொகுதி சாயல்குடியில் 1983-ல் பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டப் படும் இதுவரை வேலையே துவங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ). மற்றும் (ஆ.) அடிக்கல் நாட்டப்பட்ட போது, சாயல்குடி, ஊராட்சியாக இருந்தது. 1984ம் ஆண்டு அக்டோபர் திங்களில் இது பேரூராட்சி நிலைக்கு உயர்த்தப் பட்டது. பேரூராட்சி புதிதாக துவக்கப்பட்டதாலும், நிதி ஆதாரமின்மையாலும், வரி உயர்த்த அரசு தடை இருந்ததாலும், பேருந்து நிலையம் கட்டும் பணியை இதுகாறும் எடுத்துச்செய்ய இயலாமல் போய்விட்டது.

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியானதற்குப் பிறகு எப்போது அந்த வேலை தொடங்கப்படும் ? அல்லது அடிக்கல் நாட்டப்பட்ட அந்தப் பேருந்து நிலையத்தில் எப்போதுமே வேலை தொடங்கப்படாதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேரூராட்சியினுடைய ஆண்டு வருமானம் 2 லட்சத்து 90 ஆயிரம் ரூபாயாக இருக்க, அதனுடைய ஆண்டு செலவினம் 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாயாக இருப்பதால் இந்த நிலையிலே அந்தப் பேருந்து நிலையத்தைத் தொடர்ந்து எப்படிக் கட்டுவது என்பதை மீண்டும் அரசு ஆராயும்.